# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
# கலை கலாசார பீடம்
# மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு
# 2014 / 2015(November, December – 2019)

**CRS 3243 Study of Selected Religious Literatures Adapted/ Translated into Tamil**
**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

பகுதி I இல் இருந்து இரு வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

---

## பகுதி I

01. (அ) இயேசு காவியத்தின் தோற்றம் பற்றிய கருத்துக்களைச் சுருக்கமாகத் தருக.

(05 புள்ளிகள்)

(ஆ) இயேசு காவியத்தின் உள்ளடக்கங்களைக் குறிப்பிட்டு அவை பற்றிச் சுருக்கக் குறிப்பொன்று எழுதுக.

(15 புள்ளிகள்)

02. (அ) புத்தரின் சிந்தனைகளில் கொல்லாமையின் சிறப்பினைக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

(ஆ) ஆசியோதியின் கருணைக்கடல் என்ற பகுதியில் ஆசிரியர் கொல்லாமையினை எவ்வாறு வலியுறுத்துகின்றார் என்பதனை எடுத்துக்காட்டுக.

(15 புள்ளிகள்)

03. (அ) சைவசித்தாந்தம் குறிப்பிடும் மும்மலங்களின் இயல்புகளைச் சுருக்கமாக தருக.

(05 புள்ளிகள்)

(ஆ) கந்தபுராணத்தின் யுத்த காண்டத்தில் காட்டப்படும் அசுரர்களில் பிரதிபலிக்கின்ற மும்மல இயல்புகளையும் ஒப்பிட்டு விளக்குக.

(15 புள்ளிகள்)

## பகுதி II

04. பக்தி மார்க்கத்தினைப் போதிக்கின்ற திருவாசகமும் இரட்சணிய யாத்திரிகமும் தம்முள் ஒன்றுபட்டு நிற்கின்ற இடங்களைத் தகுந்த ஆதாரங்களுடன் தெளிவுபடுத்துக.

(20 புள்ளிகள்)

05. உமர்கய்யாம் பாடல்களில் சோக உணர்ச்சியே வெளிப்படுகின்றது இக் கூற்றினைத் தகுந்த ஆதாரங்களின் வழி மெய்ப்பிக்குக.

(20 புள்ளிகள்)

06. ஆசியயோதியிலே சாதிக்கொடுமை கடியப்படும் விதத்தினை கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை எவ்வாறு வெளிப்படுத்தியிருக்கின்றார் என்பதனை எடுத்துக்காட்டுகளின் ஊடாக விளக்குக.

(20 புள்ளிகள்)

07. இயேசு காவியத்தின் மலைப்பொழிவு என்ற பாடற் பகுதியிலே மத்தேயு நற்செய்திக்கருத்துக்களை கண்ணதாசன் எவ்வாறு கையாண்டிருக்கின்றார் என்பதனைத் தெளிவுபடுத்துக.

(20 புள்ளிகள்)